**சுதந்திர சதுக்கத்தில் சர்வதேச யோகா தின வைபவம் பெரிய அளவில் அனுசரிக்கப்பட்டது**

15 ஜூன் 2019, அன்று சுதந்திர சதுக்கத்தில் 5 ஆவது சர்வதேச யோகா தின நிகழ்வு அனுசரிக்கப்பட்டது .சுகாதார அமைச்சர் ராஜித சேனரட்ன, காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கௌரவ . கயந்த கருணதிலக்க, மற்றும் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபவிருத்தி அமைச்சர் கௌரவ பழனி திகாம்பரம் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டும் மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து அவர்களின் பிரசன்னத்திலும் , இந்திய உயர் ஸ்தானிகராலயம் இந்தப் பெரும் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது . இலங்கையின் அனைத்துப் பாகங்களிலுமிருந்தான நூற்றுக்குமதிகமான யோகா ஆர்வங் கொண்டவர்கள் நிகழ்வில் பங்கு கொண்டனர்.

கூடியிருந்தவர்களிடையே பேசும் பொழுது , இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து இந்தியா மற்றும் இலங்கைக்கிடையில் பகிர்ந்து கொள்ளும் பொதுவான பாரம்பரியங்களுள் யோகா ஒரு முக்கியமான தூணாக உள்ளது எனக் குறிப்பிட்டார் . யோகா மற்றும் பௌத்த சித்தாந்தத்திற்கிடையில் வலுவான ஒரு பிணைப்பு பற்றிக் கூறிய அவர் யோகா என்பது எங்களது உடல்கள் மற்றும் மனங்களுக்கிடையில் மட்டுமன்றி எங்களது சமூகங்களுக்கும் இடையில் கூட அமைதியையும் ஒருமைப்பாட்டையும் கொண்டுவரக் கூடிய ஒரு ஒன்றிணைக்கும் சக்தியாக உள்ளது என்றார்.

ஸ்வாமி விவேகானந்த கலாச்சார நிலையம், இராம கிருஷ்ண மிஷன், அஷ்டாங்கா யோகா மந்திர், செத்சட யோகா, ஹத்த யோகா நிலையம், கிரியா பாபாஜி யோகா ஆரண்யம், தமய யோகா, மனித மேம்பாட்டு நிலையம், பிரம்ம குமாரி ராஜ யோகா நிலையம், வாழும் கலை, எனது யோகா மையம், சக்தி ஆனந் யோகாப் பாடசாலை (மட்டக்களப்பு), ஆதி யோகம், ஆரோக்ய அனஹட்ட யோகா, சம்ஸ்குருத்தி பதஞ்சலி யோகா நிலையம் மற்றும் ரித்மிக் யோகா போன்ற இலங்கையின் யோகா நிலையங்களிலிரு ந்தான யோகா நிபுணர்கள் யோகா, பிரணாயமம் மற்றும் தியானம் என்பவற்றின் ஒரு புத்துணர்வுப்படுத்தும் பயிற்சிகளையும் தொடர்ந்து யோகா செய்து காட்டுதல்களையும் நடத்தினர் . இந்நிகழ்வு இலங்கை அரசாங்கத்தின் கலாச்சார அமைச்சு , மற்றும் டாடா மோட்டார்ஸ் என்பவற்றின் கூட்டிணைவோடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஒவ்வொரு வருடமும் ஜூன் 21 ஆம் திகதியன்று வரும் சர்வதேச யோகா தினத்தை அனுசரிப்பதற்கு ஸ்வாமி விவேகானந்த கலாச்சார நிலையத்தினால் ஜூன் மாதம் முழுவதிலுமாக ஒரு தொடர்ச்சியான பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன . இது, உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஒருங்கிணைதலுடன் நடத்தப்படும் யோகா நிகழ்ச்சி , களனி மகா விகாரையில் நடத்தப்படும் அமைதிக்கான யோகா நிகழ்ச்சித் திட்டம், சர்வோதாயாவில் நிகழும் ஒற்றுமைக்கான யோகா மற்றும் ஸ்வாமி விவேகானந்த கலாச்சார நிலையத்தில் நிகழும் ஒரு யோகாவும் நாட்டியமும் நிகழ்ச்சி என்பவற்றை உள்ளடக்குகின்றன . அபேக்சயா புற்றுநோய் வைத்தியசாலையில் யோகா ஒரு சிகிச்சை முறையாகவும் மற்றும் நாடு முழுவதிற்குமான யோகாசன வெற்றிப் போட்டி ஸ்வாமி விவேகானந்த கலாச்சார நிலையத்திலும் நடைபெறும்.

இலங்கையிலுள்ள இளைஞர்கள் மத்தியில் சமூக ஊடகத்திலான ஒரு தனித்துவமான யோகா சவால் #idoyoga என்பதும் பிரபல்யம் பெற்று வருகின்றது.

*****

கொழும்பு

ஜூன் 15,2019